# மணப்பாறை நகராட்சி

2020- ஆம் ஆண்டு நவம்பர் மாதம் (24.11.2020) 24 – ஆம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 24.11.2020 | **பொருள் – 1**<br>இந்நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் , திறந்தவெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தலற்ற நகராட்சி (ODF +) என அறிவிக்கும் பொருட்டு , நகர்மன்ற தீர்மான எண் .862, நாள்.08.10.2020-ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு பொது மக்களிடம் ஆட்சேபனை உள்ளதா என் பதை 15நாட்களில் தெரிவிக்கம் பொருட்டு 04.11.2020 அன்று தினமலர் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. திறந்தவெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தலற்ற நகராட்சி என அறிவிப்பதில் எந்தவித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை . எனவே இந்நகராட்சியினை திறந்தவெளியில் ம லம் மற்றும் சிறுநீர் கழித்தலற்ற நகராட்சி என அறிவிக்க அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>அனுமதிக்கலாம்.<br>(1788/2019/எச்1) | **தீர்மான எண்.874 அனுமதிக்கப்பட்டது.** |
| 24.11.2020 | **பொருள் -2**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் ஈப்பு TN 45 BZ 7050க்கு ஆயில் சர்வீஸ் செய்தல், Renew all oil service சரிசெய்தல், Foot rest (Tinkering work) & water wash & wheel brake checkup மற்றும் PMS(Periodic service mainteance) ஆகிய பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.25854.00/–க்கு திருச்சி சிவா ஆட்டோ மொபைல்சில் பணி மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்கானும் செலவின தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | **தீர்மான எண்.875 அனுமதிக்கப்பட்டது.** |

| 24.11.2020 | **பொருள் – 3** | **தீர்மான எண்.876 அனுமதிக்கப்பட்டது.** |
|---|---|---|

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந .க.எண்.32979/J2/2018 நாள்.25.03.2019-ன்படி, இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை முழுமையாக செயல்படுத்திட 107 பணியாளர்கள் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதன் பேரிலும், நகர்மன்ற தீர்மான எண் .861 நாள்.08.10.2020 -ல் 01.12.2020 முதல் 30.11.2021 வரையிலான ஒரு ஆண்டு காலத்திற்கு மேற்காணும் ஒப்பந்த பணிகள் மேற்கொள்ள உண்டாகும் செலவினத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டத ன் பேரிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தகுதி வாய்ந்த இரு ஒப்பந்தப்புள்ளிகள் (Technically Qualified bid) வரப்பெற்றன.

1. சரம் என்விரோ சர்வீஸ் (பி) லிட், சென்னை
2. BSS Facility சர்வீஸ், சென்னை

எனவே மேற்காணும் தகுதி வாய்ந்த ஒப்பந்த நிறுவனங்களின் ஒப்பந்த விலையினை (Price Bid) ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்த விலை விபரம் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு) | ஒப்பந்த விலை (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு) | வித்தியாச விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | சரம் என்விரோ சர்வீஸ் (பி) லிட், சென்னை | 534.03 | 529 | மதிப்பீட்டை விட 0.94% குறைவு |
| 2. | BSS Facility சர்வீஸ், சென்னை | 534.03 | 540 | மதிப்பீட்டை விட 1.12% அதிகம் |

எனவே வரப்பெற்ற மேற்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகளில் சரம் என்விரோ சர்வீஸ் (பி)லிட் நிறுவனம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.94 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ளதாலும், மற்றொரு நிறுவனமான BSS Facility சர்வீஸ் (பி) லிட், நிறுவனம் மதிப்பீட்டு ரேட்டைவிட 1.12% ஒப்பந்தப்புள்ளி விகிதம் கூடுதலாக வழங்கியுள்ளதாலும் , குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை வழங்கிய சரம் என்விரோ சர்வீஸ் (பி) லிட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

அனுமதிக்கலாம்

(ந.க.எண்.74/2015/எச்1)

| | | |
|---|---|---|
| 24.11.2020 | **பொருள் – 4**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.130/2020/கே2-1 நாள்.29.09.2020-ன்படி, இந்நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணியாற்றிய திரு .பா.சரவணக்குமார் என்பவரை உசிலம்பட்டி நகராட்சிக்கு பணிமாறுதல் செய்து உத்திரவிடப்பட்டதை தொடர் ந்து, உசிலம்பட்டி நகராட்சியில் பணியில் சேர அனுமதிப்பது தொடர்பாக திரு.பா.சரவணக்குமார், அலுவலக உதவியாளர் , எனபவர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் 1)நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை, 2) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , மதுரை, 3) ஆணையர், மணப்பாறை நகராட்சி, 4)ஆணையர், உசிலம்பட்டி நகராட்சி ஆகியோர்களை எதிர்மனுதாரராக சேர்த்து வழக்கு எண் .WP(MD).14569/2019-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் ஆணையர் , மணப்பாறை நகராட்சி சார்பாக ஆஜரான திரு .ஜே.லாரன்ஸ், வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ .7500/-அய் வ ழங்கவும், செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமுதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.877 அனுமதிக்கப்பட்டது.** |
| 24.11.2020 | **பொருள் – 5**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.857/2017/சி2 நாள்.19.06.2019-ல் அறிவுறுத்தியுள்ளவாறு , இந்நகராட்சி பகுதியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் .596 நாள்.30.08.2019-ல் அனுமதித்துள்ளவாறு, மணப்பாறை நகராட்சி எல்லைக்குள் 10 இடங்களில் கலைநிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ .50,000/- IEC நிதியிலிருந்து செலவினம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**<br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1261/2019/எச்2) | **தீர்மான எண்.878 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**